சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 19.12.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 123/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-3 |
| சாட்சியின் பெயர் | : | நந்தினி |
| தந்தை பெயர் | : | குமார் |
| கிராமம் | : | திருத்துறைப்பூண்டி |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | செவிலியர் |
| வயது | : | 22 |

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜரில்லை.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவள் ஆவேன். அ.சா-1 குமார் எனது தந்தை ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு எனது தங்கை நந்துதாஷினி மூலம் எனக்கு தெரியும். ஆனால் நேரில் பார்த்ததில்லை. எனது நந்துதாஷினி தற்போது இறந்துவிட்டார். எனது தங்கை நந்துதாஷினி என்னிடம் சூரியா என்பவரை காதலித்து வருவதாக

சொன்னார். என் தங்கையின் செல்போனில் என் தங்கை மற்றும் எதிரி சூரியா இருவரும் ஒன்றாக கைபோட்டு கொண்டு இருப்பது போலவும், எதிரி சூரியாவின் கன்னத்தில் என் தங்கை முத்தம் கொடுப்பது போல் புகைப்படங்களை பார்த்தேன். என் தங்கையிடம் இது சம்மந்தமாக கேட்டபோது என் தங்கை மேற்படி பெயர் சூரியா என்றும், அவரை தான் நான் காதலித்து வருகிறேன் என்று எனது தங்கை கூறினார். நான் அவரை கட்டித்தேன். பின்னர் தொடர்ந்து இரவு நேரங்களில் என் தங்கையின் போனிற்கு எதிரி வேறு வேறு நம்பரில் இருந்து மிஸ்ட்டு கால் செய்து வந்தார். பின்னர் எனது நம்பருக்கும், எனது அப்பா மற்றும் அம்மா அனைவரின் நம்பருக்கும் மிஸ்ட்டு கால் செய்வார். ஒரு முறை என் போனிற்கு போன் வந்தபோது நான் எடுத்துவிட்டேன். அப்போது சூரியா குடித்து விட்டு உன் தங்கையை நான் தான் காதலித்து வருகிறேன். நான் தான் திருமணம் செய்து கொள்வேன். நான் மேல் ஜாதி உன்னை விட வயதிலும் பெரியவன். நீ பறை ஜாதி என்று பேசினார். என் தங்கை இறந்து போவதற்கு 2 நாட்களுக்கு முன்பாக என்னிடம் நான் கர்பமாக இருந்தேன். இப்படி இருந்தால் யாரும் திருமணத்திற்கு ஒத்துக்கொள்ள மாட்டார்கள். கழைத்துவிடு என்று கூறியதால் நான் கருவை கழைத்துவிட்டேன் என்று கூறினார். தற்போது என்னை திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று கூறுகிறான் என்று என் தங்கை என்னிடம் கூறினார். பின்னர் நான் நீ எதுவும் செய்ய வேண்டாம் நான் வீட்டிற்கு வந்து அப்பா அம்மாவிடம் பேசுகிறேன் என்று என் தங்கையிடம் நான் கூறினேன். கடந்த 19.03.2025 தேதி மதியம் 12.35 மணியளவில் 7812894878 என்ற எண்ணிலிருந்து எனது செல்போனிற்கு போன் வந்தது. அப்போது நான் சூரியா பேசுகிறேன். உன் தங்கை திருமணம் செய்து கொள்ள கூறி தொடர்ந்து வற்புறுத்தி தொந்தரவு செய்து வருகிறார். நீ பற ஜாதி நான் எப்படி திருமணம் செய்து கொள்ள முடியும் என்று கூறினார். நான் தூக்கு போட்டுக்கோ என்று சொன்னேன் தூக்கு போட்டுக்கொள்வார் போய் அள்ளிக்கோ என்று கூறினார். பின்னர் இதனை அ.சா-1 ஆன எனது அப்பாவிற்கு சொன்னேன். அப்பா வீட்டில் இல்லை வெளியே சென்றிருப்பதாக சொன்னார். அம்மாவிற்கு போன் செய்தேன் அம்மாவும் வெளியே சென்றிருப்பதாக சொன்னார். எனது வீட்டிற்கு அருகாமையில் வீட்டில் உள்ள சாந்தா என்பவர் நம்பருக்கு போன் செய்து தகவல்

சொன்னேன். அவர் அருகில் இருந்த அருள்செல்வி மற்றும் ரவி ஆகியோர்களை அழைத்து சென்று பார்த்தபோது வீடு உள்புறமாக பூட்டி இருந்துள்ளது. தட்டி பார்த்தும் கதவு திறக்கவில்லை என்பதால் கதவை உடைத்து உள்ளே சென்று பாத்தாகவும், என் தங்கை நந்துதாஷினி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாவும் சொன்னார்கள். அதன் பின்னர் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் இருந்து திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு போஸ்மாடம் செய்வதற்காக அனுப்பி வைத்துள்ளதாக சொன்னார்கள். நான் ஊரில் இருந்து வந்தவுடம் என் தங்கையின் செல்போன் பாஸ்வேட்டு அனைத்தையும் எதிரி சூரியாவிடம் கேட்டு பெற்றேன். அதன் பின்னர் தங்கையின் செல்போனில் உள்ள படங்களை போட்டோ எடுத்து காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். விவரம் சொன்னேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M Digitally signed by VADIVEL M Date: 2025.12.19 18:20:42 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.